OS: 302/2018

Date:25.07.2023

பெயர்  : சந்திரன்

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை:-** வாதிகள் தரப்பில்

வாதிகள் இவ்வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளார்கள். நான் பிரதிவாதிகளில் யார் யாருக்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் அனைத்து பிரதிவாதிகள் சார்பாக சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கு எந்த சர்வே எண்ணில் போடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.3/3 ல் 40 செண்ட், 1.18 செண்ட் நிலத்திற்காக போடப்பட்டுள்ளது. இவ்வழக்கு சொத்து மூதாதையர் சொத்து என்று சொன்னால் சரிதான். ராமசாமி எந்த ஆண்டு பாககராறு செய்துகொண்டார் என்றால் 1971 ம் ஆண்டு பாககராறு செய்துகொண்டார். 1971 ம் ஆண்டு எத்தனை நபர்கள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் 8 நபர்கள் பாகபிரிவினை செய்துகொண்டார்கள். மேற்படி 8 நபர்கள் பெயர்கள் என்ன என்றால் ராமசாமிகவுண்டர், வெங்கடாசலம், சண்முகம், முருகேசன், சுப்ரமணி, சீனிவாசன், பழனிவேல், சின்னபொன்னு ஆகியோர்கள் ஆவார்கள்.

ராமசாமி கவுண்டருக்கு மொத்தம் எத்தனை ஆண் மற்றும் பெண்வாரிசுகள் என்றால் 7 ஆண்வாரிசுகள் மற்றும் 2 பெண்வாரிசுகள் அதில் ஆண்வாரிசுகளில் ஒருவர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார். ராமசாமி கவுண்டரின் ஒரு பெண்வாரிசு சின்னபொன்னு என சொல்லியுள்ளேன் மற்றொரு பெண்வாரிசு பெருமாயி ஆகும். மேற்படி பெருமாயிக்கு 1971 ம் ஆண்டு பாக ஆவணத்தில் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி பாக ஆவணத்தில் சொத்துக்கள் 8 செட்டியூல்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மேற்படி சின்னபொன்னுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை அவர் உயிருடன் இருக்கும்போதே அவரது அண்ணன் முருகேசனுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான்.

மேற்படி ராமசாமிகவுண்டரின் ஆண்வாரிசுகளில் நான் யாருடைய மகன் என்றால் சண்முகத்தினுடைய மகன். மேற்படி சண்முகத்தினுடைய வாரிசுகள்தான் பிரதிவாதிகள் அனைவரும் என்று சொன்னால் சரிதான், ஆனால் 12 வது பிரதிவாதி தவிர. பிரதிவாதிகள் 11 நபர்களுக்குமே எனது தந்தை சண்முகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள C செட்டியூல்

சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தந்தை சண்முகத்துடன் உடன்பிறந்த 5 ஆண்வாரிசுகளின் வாரிசுகள் தான் இந்த தாவா வாதிகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 1971 ம் ஆண்டு பாகபிரிவினை ஆவணத்தில் எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி பாக ஆவணத்தில் A செட்டியூல் முதல் H செட்டியூல் வரை சொத்துக்கள் பிரித்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாக ஆவணத்தில் விடப்பட்ட பெருமாயி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை.

உடன்பிறந்த சகோதரிகளில் ஒருவருக்கு சொத்து கொடுக்கும்போது மற்றொரு சகோதரிக்கும் சொத்து கொடுக்கப்படவேண்டும் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. சொத்துக்கள் அனைத்தும் விவசாய நிலம் என்றால் சரிதான். சொத்துக்கள் அனைருக்குமே அளவீடு மாறி மாறி வருகிறதா என்றால் இல்லை, அனைவருக்கும் ஒரே அளவில்தான் வருகிறது.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/-DW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.